# Namvazhvu

**April 13, 2014**



## சிகரம் கூட சின்னதுதான்!



'வானம் கூட தொட்டுவிடும் தூரம்தான், வா பெண்ணே! வாகைகள் பல சூடிட உயர்த்திடு உன் சிரமே! சிகரங்கள்கூட சின்னதாகத்தான் தோன்றும் சிறகுகள் நீ சுமந்து பறக்கையிலே!'

ஆணாதிக்கம் நிறைந்த சமூகத்தில் 'நம்மால் என்ன செய்ய முடியும்?' என்று எண்ணும் பெண்கள் மத்தியில், 'சாதிக்கப் பிறந்தவர்கள் நாங்கள்' எனச் சவால்விடும் வீரமங்கையர் இல்லாமல் இல்லை. விண்வெளி சென்ற கல்பனா சாவ்லா முதல், வீதிகளின் விளிம்புகளில் விளக்கேற்றிய அன்னை தெரசா வரை எத்தனையோ சாதனை மங்கையர் சிகரம் தொட்டவர்கள்தாம். அந்த வரிசையில் சிகரம் தொட்ட பெண்மணிதான் அருட்சகோதரி ஜெசிந்தா குவாடரஸ். இவர் புனித மரியாவின் பிரான்சிஸ்கு மறைபரப்புச் சபையைச் (FMM) சார்ந்தவர். இவர் ஒரு நியாயமான, மனிதாபிமானம் நிறைந்த சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற முனைப்பு கொண்டவர். மேலும் இவர் இளம் மாணவியர்கள் சேவையில் பல்லாண்டுகள் பணியாற்றி வரும் பிரசித்திப் பெற்ற சென்னை, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் முதல்வர் ஆவார்.

கடந்த மாதம் 23 ஆம் தேதி 'விஜய்' டி.வி. நடத்திய விருது வழங்கும் விழாவில் 'சிகரம் தொட்ட பெண்கள்' விருது பெற்ற சகோதரியிடம் இன்றைய உயர் கல்வி முறை பற்றியும், அதில் திருச்சபையின் பங்களிப்பு பற்றியும் நமது 'நம் வாழ்வு' துணை ஆசிரியர் அருட்சகோதரி செலின் மேற்கொண்ட நேர்காணல் இதோ....

■ **'விஜய்' டி.வி.யின் 'சிகரம் தொட்ட பெண்கள்' வரிசையில் கல்வித் துறையில் சிகரம் அடைந்த பெண்ணாக அங்கீகரிக்கப்பட்டு, சிறப்பு விருதுக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பற்றிக் கூறுங்கள்?**

கடந்த மாதம் 23 ஆம் தேதி 'விஜய்' டி.வி. எனக்கு 'சிகரம் தொட்ட பெண்கள்' என்ற விருதினை வழங்கி கௌரவித்தது. உண்மையில் இதற்கு முன் இப்படி ஒரு விருது இருப்பது கூட எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் நான் இறைவனின் கரங்களில் ஒரு கருவி மட்டுமே. அவரே என்னையும், இந்த நிறுவனத்தையும் நடத்துகிறவர். எனவே, அவரே எல்லா புகழுக்கும் உரியவர்.

இந்த விருதை நான் ஒரு தனிப்பட்ட கௌரவமாகக் கருதவில்லை. மாறாக, தமிழகத்தின் மக்கள் குரலாகச் செயல்படும் ஒரு பிரபல டி.வி. சேனலான விஜய். டி.வி. பெண்களின் உயர்கல்விச் சேவையில் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் பங்களிப்பை அங்கீகரிப்பதாகவே கருதி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக நான் விஜய் டி.விக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இயேசுவின் அடிச்சுவட்டில் திருச்சபையின் கல்விப் பணியைத் தொடரச் செய்வதே எம் இலக்காயினும், இவ்விருது எமக்கு இன்னமும் அதிக உழைப்பையும், பங்களிப்பையும் சமுதாயத்திற்கு அளிக்கவும், உயரிய இலக்கை நாடவும் அதீத ஊக்கத்தையும், புதிய உத்வேகத்தையும் கொடுத்துள்ளது.



■ **மனித மாண்புகளுக்கு மதிப்பு நலிந்து வரும் இன்றையக் காலக்கட்டத்தில் திருச்சபையின் கல்வி நிறுவனங்கள் ஆற்ற வேண்டிய பங்கு என்ன?**

திரு. இராதா கிருஷ்ணன் கூறுவதுபோல் கல்வியானது அறிவை,

திறமையை வளர்ப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், நற்பண்புகளையும், நன்னெறிகளையும் விதைப்பதாகவும் இருக்க வேண்டும். கல்வி ஒரு மனிதனை முழுமைப் படுத்தக்கூடியதாக, நல்லதொரு குடிமகனாக, குடிமகளாக, தன் பங்களிப்பைச் சமுதாயத்திற்கு அளிக்க உதவுவதாக, வாழ்வின் சவால்களைச் சந்திக்க திடப்படுத்துவதாக இருக்க வேண்டும். தன்னிலை மாற்றத்திற்கு உந்து சக்தியாகவும், சமுதாய மாற்றத்திற்குத் தொடக்கப் புள்ளியாகவும் கல்வி அமைய வேண்டும். எனவே, கல்வி நிறுவன வளாகங்கள் தனி வளர்ச்சிக்கான, குழு முயற்சிக்கான, சமூக மாற்றத்திற்கான வாய்ப்புகளை வாரி வாரி வழங்குவதாக இருக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் கல்வி நிறுவனங்கள் மதிப்பெண் கண்ணோட்டத்தில் மட்டுமே வேலை செய்யாமல் மாணவ-மாணவியரின் ஒட்டுமொத்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்பதே என் கருத்து.

■ **ஒரு பிரசித்திப் பெற்ற கல்லூரியின் முதல்வர் என்ற முறையில் ஆயிரக்கணக்கான இளம்பெண்களைச் சந்தித்திருப்பீர்கள். அதன் அடிப்படையில் இன்றைய இளம் தலைமுறையினர் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

உயரிய குறிக்கோள்களுடன் கடின முயற்சியை மேற்கொள்ளும் மாணவியரையும் எங்கள் கல்லூரியில் பார்க்க முடிகிறது. எனினும் இன்றைய இளம் தலைமுறையினர் பெரும்பாலும் சுலபமாக வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். சரியான திட்டமிடுதல் இல்லாமல் தாங்கள் எண்ணுவதை எல்லாம் கடின உழைப்பின்றி எளிதாக அடைந்துவிட முயற்சிப்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

■ **இதற்கு யார் காரணம் என்று நினைக்கின்றீர்கள்?**

தனிப்பட்ட முறையில் யாரையும் சொல்ல முடியாது. பள்ளிகள் ஆரம்ப நிலையிலேயே மாணவர்கள் தங்களின் குறிக்கோள்களை நிர்ணயிக்க உந்துதல் அளிக்க வேண்டும். நற்பண்புகளை வலியுறுத்தி கல்வியை கடமையுடன் பிணைக்கப்பட்ட சுதந்திரமாகப் பாவிக்கக் கற்றுத்தர வேண்டும். பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியில் முழு அக்கறையும், ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும்.

■ **உயர் கல்வியில் வேலை சார்பு துறையைத் தேர்வு செய்வதில் மாணவர்களிடையே எந்த அளவுக்குத் தெளிவு காணப்படுகிறது?**

பெரும்பான்மையான மாணவியர் தங்கள் எதிர்காலத் திட்டம் பற்றிய தெளிவுடன் உள்ளனர். தாங்கள் பயிலும் துறை சார்ந்த பிற பிரிவுகளைப் பற்றியும் அறிந்துள்ளனர். எங்கள் கல்லூரியில் இதற்கான சூழலை ஏற்படுத்தித் தருவதாலும், பல்வேறு சான்றிதழ் வகுப்புகள் நடத்தப்படுவதாலும், அவர்களுக்குத் தெளிவும், தன்னம்பிக்கையும் ஏற்படுகிறது.

■ **இன்றளவும் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரிகளில் அளிக்கப்படும் துறைகளுக்கு மவுசு இருக்கிறதா? அது பற்றி உங்கள் கருத்து என்ன?**

முந்தையக் காலக்கட்டத்தைவிட கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக பொறியியல், மருத்துவப் படிப்புகளைக் காட்டிலும் அறிவியல், கலைக் கல்லூரிகளில் மாணவ-மாணவியரின் சேர்க்கை ஏறுமுகத்தில் உள்ளது. மாணவ-மாணவியர் அதிக ஆர்வம் காட்ட தொடங்கியுள்ளனர். மேலும் பல உள்நாட்டு, வெளிநாட்டு, நிறுவனங்கள் வளாகத் தேர்வு நேரங்களில் ஆர்வமுடன் மாணவியர்களை அதிக அளவில் தேர்வு செய்கின்றனர். எங்கு தரம் இருக்கின்றதோ அங்கு தேவைக்கு குறைவு இருக்காது.

■ **உயர் கல்வியைத் தேர்ந்தெடுக்கும் மாணவ-மாணவியரிடம் இருந்து ஒரு கல்வி நிறுவனம் எதிர்பார்ப்பது என்ன?**

உயர் கல்வி கற்பிக்கும் நிறுவனங்களில் நுழைய மதிப்பெண்கள் ஒரு காரணியாக இருந்தாலும், அத்தோடு மாணவரிடம் இருந்து எதிர்பார்ப்பது அவர்களின் உயரிய குறிக்கோள், நல்ல பண்புகள் கடின உழைப்பிற்கான ஆர்வம்.

■ **உயர் கல்விக்குத் தன்னை தகுந்த முறையில் தயாரிக்க மாணவ-மாணவியர் தங்களை எந்தெந்த வழிகளில் தயாரிக்க வேண்டும்?**

உயர் கல்வி என்பது பள்ளிப் பருவம் முடிவடைந்து மாணவ-மாணவியர் கல்லூரி எனும் புதிய உலகத்திற்குள் சஞ்சரிக்கும் ஒரு காலம். இதனைப் பொதுவாக மாணவ-மாணவியர் சுதந்திரக் காலக்கட்டமாகக் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் அது கடமைகளுடன் பிணைக்கப்பட்ட சுதந்திரம் (Freedom with responsibility) என்பதை மறந்து போகக்கூடாது. எனவே, எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கிறோமோ அந்தத் துறைக்கு ஏற்றாற்போல் தங்களைத் தயாரிப்பது நல்லது. அத்தோடு சுய தயாரிப்பும் அவசியம்.

■ **உயர் கல்வியில் பெற்றோரின் பங்கு என்ன?**

பெற்றோர்கள் கல்வி அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாகச் சேர்க்கப்பட வேண்டும். ஏனெனில் ஆசிரியர்-மாணவர்-பெற்றோர் எனும் ஒரு கூட்டு முயற்சி மட்டுமே நிறைவான பயனைத் தரும். எமது கல்லூரியில் மாணவர்-ஆசிரியர் தனிப்பட்ட உடன் பயணிப்பு முறை அமுல்படுத்தப்பட்டதே, ஆசிரியர்-மாணவர் இணக்கத்தை அதிகப்படுத்துவதோடு மட்டுமல்லாது மாணவரின் வளர்ச்சிப் படிநிலைகளைப் பற்றி பெற்றோருடன் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியத்திற்காகத்தான்.

■ **வளரும் தலைமுறையினருக்கு உங்களின் செய்தி என்ன?**

முடியாதது என்று எதுவும் கிடையாது. எதிர்நோக்கு, ஒருமுகத்தன்மை, நீடித்த நிலைப்பாடு மற்றும் தெளிவான குறிக்கோள் இவைகளே வெற்றிக்கு வழிகோலும். இவற்றோடு எதிலும் நூறு சதவிகித அர்ப்பணிப்பும் இருந்தால் வெற்றி வசமாகும். ●